TAMIL NADU LEGISLATURE
9-OCT 1974
MADRAS

தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை.

வெள்ளிக்கிழமை, 1974 மார்ச் 29.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4-00 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Teachers in Kanyakumari District

* 241 *Q.*—THIRU M. ARUMUGASWAMI (ON BEHALF OF THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether teachers in Kanyakumari District who would have been eligible for increments for their service prior to getting their B.T. degrees under the T.C. Rules have not been given weightage for such service at the time of reorganisation of States;

(*b*) whether they appealed to the Director of School Education more than two years ago for the redressal of this grievance;

(*c*) whether orders have been passed; and

(*d*) if not, the reasons for the delay ?

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ஆசிரியர்கள்

திரு. எம். ஆறுமுகசாமி (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஆசிரியர்கள் பி.டி. பட்டம் பெறுவதற்கு முன்பு அவர்கள் ஆற்றிய பணிக்காக திருவாங்கூர்-கொச்சி விதிகளின் கீழ் ஊதிய உயர்வு பெறத் தகுதியுடையவர்களாக இருந்திருப்பினும், மாநிலச் சீரமைப்பின்போது அவர்கள் அவ்வாறு ஆற்றிய பணிக்கு ஊதிய உயர்வு கொடுக்கப்படவில்லையா ?

(இ) அவர்கள் இக்குறையைச் சரி செய்யுமாறு கோரி இரண்டாண்டு களுக்கு முன்னரே பள்ளிக் கல்வி இயக்குநருக்கு விண்ணப்பித்துக் கொண் டனரா ?

(உ) இது குறித்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளனவா ?

(எ) இல்லையெனில், தாமதத்திற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மாநிலங்கள் திருத்தி அமைக்கப்பட்டபோது கன்னியாகுமரி மாவட்ட ஆசிரியர்கள் தாங்கள் திருவாங்கூர்-கொச்சி சம்பள விகிதத்தில் என்ன சம்பளத்தைப் பெற்றிருக்க முடியுமோ அச்சம்பளத்தை தமிழ் நாட்டிலும் பெற அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் பி.டி. பட்டம் பெறுவதற்கு முன்பு செய்த பணியைக் கணக்கில் கொண்டு தனி ஊதிய உயர்வு அளிக்கும் பிரச்சினை அப்பொழுது எழவில்லை.

(இ) இல்லை.

(உ) & (எ) இக்கேள்விக்கு இடமில்லை.

Teachers Transferred from Andhra Pradesh

* 242 Q.—THIRU S. MUTHUSWAMY: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether any representations have been received from the teachers transferred from Andhra Pradesh, consequent on the 'Pataskar Award' and working in the Management Schools in Tiruthani Taluk, stating that their pay had not been refixed with effect from 1–6–1960, as per the First Pay Commission's recommendations taking into account their service in Andhra Pradesh; and

(b) if so, the action taken to refix their pay and to pay the arrears due to them ?

ஆந்திரப் பிரதேசத்திலிருந்து மாற்றப்பட்ட ஆசிரியர்கள்

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) "படாஸ்கர் குழுவின் தீர்ப்பினை" யொட்டி ஆந்திரப் பிரதேசத்தி லிருந்து மாற்றப்பட்டவர்களும், திருத்தணி வட்டத்திலுள்ள தனியார் பள்ளி களில் பணிபுரிபவர்களுமான ஆசிரியர்களிடமிருந்து, அவர்கள் ஆந்திரப்